இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிக் கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் 2017 / 2018

**ESC 1134 / EPC 1234** மொழித்திறன்களின் விருத்தி

காலம் : 2 மணித்தியாலங்கள்

---

திகதி : 22.04. 2019 பி.ப 2.00 – பி.ப 4.00

---

முதலாம் பகுதியில் அனைத்து வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.

பகுதி **I**

1. மொழியினுடைய செயற்பாடுகள் ஐந்தினை (05) எழுதுக.
2. நுண் இயக்கத்திறன்களை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் ஐந்தினைக் (05) பெயரிடுக?
3. பிள்ளைகளின் கேட்டல் திறன்களின் விருத்தியில் தங்கியிருக்கக்கூடிய நான்கு (04) தனித்துவமான பண்புகளைக் குறிப்பிடுக?
4. "பார்வை பிரித்தறிகை" என்பதனை உதாரணம் தந்து விளக்குக?
5. முன்பள்ளிப் பிள்ளைகளிடம் சுயாதீன உரையாடல்களை விருத்தி செய்வதற்கான தலைப்புகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக?
6. "முன்-எழுத்துத் திறன்கள்" என்றால் என்ன என்பதனை உதாரணங்கள் தந்து விளக்குக?
7. கேட்டல் திறன்கள் விருத்தி அடையாத முன்பள்ளிப் பிள்ளைகளை எவ்வாறு அடையாளம் காண முடியும் என்பதனை நான்கு (04) பண்புகள் மூலம் குறிப்பிடுக?
8. முன்பள்ளிப் பிள்ளைகளின் பேச்சில் ஏற்படும் வழுக்கள் நான்கினைக் (04) குறிப்பிடுக?

**(08X05=40** புள்ளிகள்)

## பகுதி II

09. i) கேட்டல் திறன்களை விருத்தி செய்வதற்கு பிள்ளைகளிடத்தில் உபயோகிக்ககூடிய நான்கு (04) வேறுபட்ட செயற்பாடுகளைக் குறிப்பிடுக?

(04 புள்ளிகள்)

ii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு செயற்பாடுகளை எவ்வாறு ஒழுங்கமைப்பீர் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

iii) அத்தகைய செயற்பாடுகளூடாக கேட்டல் திறன்களை எவ்வாறு விருத்தி செய்ய முடியும் என்பதனை விபரிக்குக?

(06 புள்ளிகள்)

10. i) கதைகளினூடாக பிள்ளைகளின் பேச்சை எவ்வாறு விருத்தி செய்ய முடியும் என விளக்குக.

(10 புள்ளிகள்)

ii) முன்பள்ளிப் பிள்ளைகளின் பேச்சுத் திறன்களை விருத்தி செய்வதன் முக்கியத்துவத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

11. i) முன்பள்ளிப் பிள்ளைகளிடத்தில் முன்-எழுத்தினை விருத்தி செய்வதன் முக்கியத்துவத்தினை விளக்குக?

(10 புள்ளிகள்)

ii) பிள்ளைகளது எதிர்கால கற்றல் நிலைகளில் குறைந்த விருத்தியுடைய முன் எழுத்து திறனானது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதனை உதாரணங்கள் தந்து விளக்குக?

(10 புள்ளிகள்)

12. i) பிள்ளைகளுடைய மொழி விருத்தியில் விளையாட்டு நடவடிக்கைகள் எத்தகைய விதத்தில் பங்களிப்புச் செய்கின்றது என்பதை உதாரணங்கள் குறிப்பிட்டு விளக்குக?

(10 புள்ளிகள்)

ii) "கேட்டல் பிரித்தறிகை, செவிமடுத்தல், பேசுதல் திறன்கள் ஒன்றோடொன்று தொடர்புடைய செயன்முறையாகும்". பொருத்தமான உதாரணங்களுடன் இக்கூற்றினை விளக்குக?

(10 புள்ளிகள்)

13. i) முன்-எழுத்துகளின் வகைகள் மூன்றினைப் பெயரிடுக?

(06 புள்ளிகள்)

ii) முன்பள்ளிப் பிள்ளைகளின் முன்-எழுத்து விருத்தியில் வீட்டுச் சூழல் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றதென்பதை உதாரணங்கள் தந்து விளக்குக?

(08 புள்ளிகள்)

iii) பிள்ளைகளின் மொழி விருத்தியில் தாக்கம் செலுத்தும் காரணிகள் ஆறினைக் (06) குறிப்பிடுக?

(06 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது